ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2294/32 - 2022 අගෝස්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2022.08.23
*2294/32 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறிந்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்கு பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க (பா.உ),**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள், "சுஹுරුபாய",
சுபுதிபுர வீதி, பத்தரமுல்லை,
2022, ஓகத்து 01.

1A - G 37323 — 21 (2022/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**ஹொரவ்பொத்தான நகர அதிகார பிரதேசம்**

நிரல் I

*வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம் ஹொரவ்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 128 ஹொரவ்பொத்தான மெதவாச்சி சந்தி, 130 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட ஹொரவ்பொத்தான பிரதேச சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை வரையறையாக கொண்டதுமான முழு பிரதேசத்தினையும் உள்ளடக்கும்*

நிரல் II

*வடக்கு:*

*இலக்கம் 129 கிவ்லேக்கட கிராம அலுவலர் பிரிவு கிழக்கு எல்லை, இலக்கம் 134 புஹூலேவல கிராம அலுவலர் பிரிவு தெற்கு எல்லையின் குறுக்கு வெட்டுபுள்ளி தொடக்க புள்ளியாகக் கொண்டு இலக்கம் 134 புஹூலேவல கிராம அலுவலர் பிரிவு தெற்கு எல்லையினூடாக கிழக்கு மற்றும் தெற்கு திசையினூடாக பயணிக்கும் இலக்கம் 133 மர்தன்கடவல கிராம அலுவலர் பிரிவு வடக்கு எல்லையின் குறுக்கு வெட்டுப்புள்ளி சந்திக்கும் வரை.*

*கிழக்கு:*

*கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 133 மரதன்கடவல கிராமஅலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினூடாக தெற்கு திசையை நோக்கி பயணிக்கும், அந்த இடத்தில் இருந்து புத்தளம் திருகோணமலை வீதியின் குறுக்கு வெட்டுப்புள்ளியின் தென்கிழக்கு திசையினூடாக பயணிக்கும் இலக்கம் 133 மாரதன்கடவல கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லை மற்றும் இலக்கம் 136 திரப்பன்கடவல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையின் குறுக்கு வெட்டுப்புள்ளியை சந்திக்கும் வரை.*

*தெற்கு:*

*கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 136 திரப்பன்கடவல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையின் ஊடாக வடமேற்கு, மேற்கு மற்றும் தென்மேற்கு திசையினுடாக பயணிக்கும் புத்தளம் திருகோணமலை வீதியின் குறுக்கு வெட்டுபுள்ளியின் இலக்கம் 131 நானுமில்லவெவ கிராம அலுவலர் பிரிவு வடக்கு குறுக்கு வெட்டுப் புள்ளியினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து மேற்கு திசையினுடாக இலக்கம் 131 நானுமில்லவெவ கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினூடாக தென்மேற்கு திசையினூடாக பயணிக்கும் இலக்கம் 122 முக்கரவெவ கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் குறுக்கு வெட்டுப்புள்ளி சந்திக்கும் வரை.*

*மேற்கு:*

*கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 122 முக்கரவெவ கிராம அலுவலர் பிரிவு கிழக்கு எல்லையினூடாக மெதவாச்சி - ஹொரவ்பொத்தான வீதியின் குறுக்கு வெட்டுப்புள்ளி வடக்கு திசையினூடாக தொடக்கப் புள்ளியினை அடையும் வரை, வரைப்பட கோட்டினை உள்ளடக்கும் பிரதேசம்.*

EOG 8-0226

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.